# பாணபத்திரனின் இறைபக்தி

வரகுண பாண்டியன் என்னும் மன்னன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிநாட்டை அரசாட்சி செய்து வந்தான். அம்மன்னன் இசைப்பிரியனாகவும் திகழ்ந்தான். அரசசபைக்குப் பல சங்கீத வித்துவான்கள் வந்து பெறுமதி மிக்க பரிசில்களை மன்னனிடமிருந்து பெறுவது வழக்கம்.

அக்காலத்தில் ஏமநாதன் என்னும் சங்கீத மேதை வடநாட்டிற் பெரும் புகழுடன் வாழ்ந்து வந்தான். அவன் "தானே இசையில் வல்லவன்" என்னும் கர்வம் கொண்டவன். ஒருநாள் அவன் இசை பாடிப் பரிசில் பெறுவதற்காகப் பாண்டிய மன்னனின் அரசசபைக்குத் தனது பரிவாரங்களுடன் வருகை தந்தான்.



ஏமநாதன் அரசனைப் புகழ்ந்து பாடினான். தன் இசைத்திறனால் அவையோரை மெய்ம்மறக்கச் செய்தான். மன்னன் அவனது இசைத் திறமையைப் புகழ்ந்து பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கினான். ஏமநாதனது கர்வம் மேலும் மேலும் அதிகரித்தது.

ஏமநாதனின் கர்வத்தைப் பாண்டிய மன்னன் அடக்க நினைத்தான். மதுரையில் இறைவன் மீது பக்திப் பாசுரங்களை மனமுருகிப் பாடும் பாணபத்திரன் என்னும் இசைக் கலைஞன் இருந்தான். அவனை அரசசபைக்கு அழைத்து வருமாறு மன்னன் தன் ஏவலாளர்களுக்குக் கட்டளையிட்டான். ஏவலாளர்கள் பாணபத்திரனை அரசசபைக்கு அழைத்து வந்தனர்.



மன்னன் அவனை நோக்கிப் "பாணபத்திரரே, உம்மால் ஏமநாதனுடன் போட்டியிட்டுப் பாடி அவனை வெல்ல முடியுமா?" என்று கேட்டான். அதற்குப் பாணபத்திரன் "அரசே, உங்கள் திருவுளத்தின் பலத்தாலும், சிவபெருமானின் அருளாலும் பாடும் வல்லமை பெறுவேன். ஏமநாதனை இசைப்போட்டியில் வெற்றி கொள்வேன். அவனை அடக்குவேன்" என்றான். "நன்று! நாளையே போட்டி நடக்கும். நீ தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்" என மன்னன் பணித்தான்.



மதுரையின் பல இடங்களிலும் ஏமநாதனின் சீடர்கள் இன்னிசை பாடுவதைக் கேட்ட பாணபத்திரன் "நாளை நான் ஏமநாதனை வெற்றி கொள்வது எப்படி?" எனக் கலங்கினான். மதுரையிலுள்ள திருவாலவாய்க் கோயிலை நோக்கி விரைந்தான். அங்கு எழுந்தருளியிருக்கும் சுந்தரேசப் பெருமான் சந்நிதியை அடைந்தான். இறைவனை வீழ்ந்து வணங்கி எழுந்து தன் வேண்டுதலை எடுத்துக் கூறிக் கண்ணீர் சிந்தினான்.



கருணாமூர்த்தியான இறைவன் பாணபத்திரனின் வேண்டுதலை ஏற்றார். வயது முதிர்ந்த விறகு விற்பவனாக வேடம் பூண்டார். தமது தலையிலே விறகுச்சுமையைத் தாங்கி விலை கூறி விற்றுச் சென்றார். பகல் பொழுது கழிந்தது. ஏமநாதன் தங்கியிருந்த வீட்டின் புறத்தே இருந்த திண்ணையில் அமர்ந்து இளைப்பாறினார். சிறிது நேரத்தில் இனிமையான பாடல் ஒன்றைப் பாடினார். உள்ளேயிருந்த ஏமநாதன் இன்னிசையைக் கேட்டான். இசையில் தன்னை மறந்தான். இத்துணை அருமையான இசையை அவன் முன்னொருபோதும் கேட்டதில்லை. வெளியே வந்தான். "நீ யாரப்பா" என்று வினவினான். "அடியேன் இசை மேதை பாணபத்திரனது அடிமை. எனது வயது முதிர்ச்சி காரணமாக என்னைத் தகுதியற்றவனாகக் கருதி சீடனாக ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். ஆகவே நான் இப்போது விறகு விற்றுப் பிழைக்கிறேன்" என்றார்.

இதைக் கேட்டுத் திகைத்த ஏமநாதன் "அப்பா நீ பாடிய பாடலை மீண்டும் ஒருமுறை பாடு" என்று வேண்டினான். விறகு விற்பவன் பாடலை மீண்டும் பாடினான். அப்பாடல் ஏமநாதனின் நாடி நரம்பிலே பல உணர்வுகளைத் தட்டி எழுப்பியது. இதைப் போன்ற தேவகானத்தை ஏமநாதன் எப்போதுமே கேட்டதில்லை. பாணபத்திரனால் ஒதுக்கப்பட்ட அடியானின் இசையே இத்தகையது என்றால் பாணபத்திரனின் இசை எப்படியிருக்கும்? என நினைத்துக் கலக்கமுற்றான். இரவோடிரவாகத் தனது பரிவாரங்களுடன் பாண்டிய நாட்டை விட்டு ஓட்டம் பிடித்தான்.

சிவபெருமான் அன்றிரவு பாணபத்திரனின் கனவில் தோன்றி நடந்த வற்றை எடுத்துக் கூறினார். பாணபத்திரனும் மறுநாள் காலையில் மன்னனிடம் இறைவன் தன் கனவில் வந்து கூறிய விடயத்தை எடுத்துக் கூறினான். இதைக் கேட்ட பாண்டிய மன்னன் பாணபத்திரனின் பக்தியின் பெருமையைக் கண்டு வியப்படைந்தான். திருக்கோயிலுக்குச் சென்று சிவனை வணங்கிய பின்னர் பாணபத்திரனை யானை மேல் அமர்த்தி ஊர்வலம் செய்வித்தான். பல பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தான். பாணபத்திரனின் புகழ் பாண்டி நாடெங்கும் பரவியது.

**இறைவன் அடியார்களுக்கு அருள் புரிவான்**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டி நாட்டை ஆட்சி செய்த மன்னன் யார்?
(2) வடநாட்டில் இருந்து மதுரைக்கு வந்த இசைமேதை யார்?
(3) பாண்டிய மன்னன் பாணபத்திரனை அழைத்து இட்ட கட்டளை யாது?
(4) விறகு விற்போனாக மதுரைக்கு வந்தவர் யார்?

(5) பாணபத்திரனைப் பாண்டிய மன்னன் எவ்வாறு கௌரவித்தான்?
(6) ஏமநாதனிடம் காணப்பட்ட குறைபாடு யாது?
(7) ஏமநாதனின் கர்வம் அடங்கக் காரணம் என்ன?
(8) ஏமநாதன் ஏன் இரவோடிரவாகப் பாண்டி நாட்டை விட்டு ஓடினான்?

## செயற்பாடு

* ஆசிரியரின் உதவியுடன் இக்கதையில் வரும் பாத்திரங்களை ஏற்று நாடகமாக நடியுங்கள்.

- வரகுண பாண்டியன்
- ஏமநாதன்
- பாணபத்திரன்
- விறகு விற்பவர்